உ

கடவுள்துணை.

நாகமகூளப்பநாயக்கன்

காதல்.

சுப்பிரதீபகவிராயரால்

பாடப்பட்டது.

இஃது,

திருத்தணிகை

சரவணப்பெருமாளையரால்

பரிசோதிக்கப்பட்ட பிரிதிக்கிணங்க

பாக்குப்பேட்டை

மதுரைமுதலியாரால்

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

கணபதிதுணை.

கூளப்பநாயக்கன்காதல்.

காப்பு.

(வெண்பா.)

பேராரும்பெஞ்சைப் பெரியநாகேந்திரன்மேற்... ...*
சீராருங்காதலையான்செப்பவே - நேராரும் ....*
அக்கணிதரச்சொலிமு னப்பனைவலத்தில்வரும்.........*
கைக்கசமுகக்கடவுள் காப்பு ....*

பொன்மாதுமேவுதிம்ம ராயரருள்பூண்டிருக்கும் ....*
நன்மார்னிதிபெரிய நாயகன்மேற்காதல்சொல .... (௧)

வந்துதவுசொன்மதுர வாக்குதவியெப்பொருளுந்... ... ...*
தந்துவவேண்டுமெங்கள் தந்திமுகத்தோனே..............(௨)

ஆளும்பெருமா ளகோபிலமால்மெய்யருளைந் ....*
நாளும்பெறும்பெரிய நாயகன்மேற்காதற்சொல...........(௩)

ஏடுமணிவடமு மேந்துஞ்சரஸ்வதியே ....*
யாடுமயிலேறிவரு மையனேமுன்னடவாய் ....(௫)

கோமுனிவர்கொண்டாடுங் கூடற்பரஞ்சோதி ....*
மாமுனிவர்செம்பொன் மலர்ப்பாததாண்மறவே ....(௫)

நாட்டுபுகழ்ப்பெரிய நாயகன்மேற்காதலைநான் ....*
சூட்டுகவிநாவலர்முன் சொல்லத்துணிந்ததுதான் ... ...(௬)

தானந்தவயோக தத்துவமில்லாவொருவன் ....*
ஞானந்தெளிந்தவர்க்கு நல்லறிவுசொல்வதொக்கும் ......(௭)

தெள்ளமிர்தமூட்டியுலா தித்திவளர்த்தெடுத்தோர்......*
கிள்ளைகுழறுமொழி கேட்டுமகிழ்வதுபோல் ...... (அ)

நன்னயவில்வேள்பெரிய நாகேந்த்ரனென்கவியி... ...*
லென்னவமுக்கண்டாலு மின்பமெனக்கொண்டருள்வான்

தேனளந்தகானவர்க்குத் தேவரமுதளக்க ... ... *
வானளத்துநிற்கும் வராகிரிவேந்தன் ... ... (௰)

கன்னியமுனையொடுங் கைகலந்ததுபோற் ... ...*
பொன்னிகலந்த புனற்குடபமாநதியான் ... ... (௰க)

வண்ணக்குவிமுலையார் மஞ்சள்நீராரோடிப்... ... ...*
பண்ணைப்பயிர்வளர்க்கும் பாண்டிவளநாடன் ... (௰உ)

வட்டமதிக்களங்க மாறத்தடவுதல்போல் ... ... *
இட்டகொடியாடுமியல்சூடிநவபுரியான் ... ...(௰ரு)

சொத்தார்கருங்குழலார் குத்துமுலைபாயமணி ... ... *
முத்தாரம்பின்னவிடு முலைத்தொடைமார்பன்... (௰ச)

ஓகைதந்துடோர்க்களத்தி லுட்புகுந்துதான்முடுகி ... *
வாகைதந்துமீண்டுவரும் வாலகைநடனப்பரியான்.. (௰ரு)

சண்டையிற்பொருங்கெடித்தலந்தகர்த்துவஞ்சனைக்கைக்
கொண்டெடுத்தறைந்துரப்பு குப்பவுக்ரகுஞ்சரத்தான் ()

விண்பிறையைவெல்லநில் மீதின்முளைத்தெழுந்த......*
தண்பிறைபோலோங்குந் தவளக்குடையுடையான் (௰எ)

உடைதிரைகள்சூழு றுகட லொலியுமுகிலிடியுமென ...*
வடையலர்கள்செவிசுடையவதிருமொலிமணிமுரசான்()

அஞ்சினார்வாக்கிலிருந் தம்புபோலோடிமட்டு ... ...*
மிஞ்சினார்மார்புருவி வீம்படக்குமாணையினான்....(௰கூ)

வட்டநிலம்புரக்கு மாரன்குமாரவர்க்கப் ... ... *
பட்டமெனக்கட்டிவைத்த பட்டாபிஷேகபரன்....(உ௰)

மிக்கவருட்சொக்கேசர் மீனாட்சிதம்மருளால் ... ... *
திக்குவிசயஞ் செலுத்துகின்றசெங்கோலான்... ...(உக)

சேற்றமுடனேதான் சிவிகையினிமேலறுமுன்னே... ... *
வேற்றரசர்பின்னிடப்போர் வென்றுவருஞ்சேனையினான்

கற்கோட்டையென்றவர்மேற் கண்சிவந்துகண்டவர்செம் ...*
பொற்கோட்டையென்னப் புகழுதிலைக்கோட்டையினான் (உ௩)

சித்தமகூளேந்த்ர செகராசன் கண்மணிபோல் .. ..*
வந்ததுரைசிங்கமெங்கள் மால்பெரியநாகேந்த்ரன் ...(உ௪)

வாணிபுகழ்வல்லக்கர் வார்குலத்தைக்கொண்டுவந்த...... .... *
தோணியெனும்பெண்ணைச் துரைபெரியநாகேந்த்ரன்...(உ௫)

பொன்னிலங்கவச்ரப் பொடியிலங்கப்பொற்கதவு ... ...*
மூன்னிலங்கப்பின்னிலங்க முத்திலங்குவாசலினான்... ...(உ௬)

ஒட்டகடமானத் தொலிமுழங்கப்பேரிகைதம் ... ... *
பட்டமுழங்கப் பரிமுழங்கவாசலினான்... .... (உ௭)

கட்டிவருஞ்சிங்களத்தார் கப்பம்வரக்காரனைக் ... ... *
குட்டிவரச்சினர்திறை கொண்டுவரும்வாசலினான்... ...(உ௮)

ஆடைவழங்க வனம்வழங்கயாசகர்க்கு ... ... *
மாடைவழங்க மனுவழங்கும்வாசலினான்... ... ...(உ௯)

சேலாடுங்கூர்விழியார் சென்றாடக்கைவசந்தன் ... ... *
கோலாட்டப்பங்கயப்பெண் கூத்தாடும்வாசலினான்... ...(௩௰)

மாமறைநூல்பொய்த்தாலும் வாரிதிநீர்பொய்த்தாலுஞ்.....*
சோமரவிபொய்த்தாலுஞ் சொன்னமொழிபொய்யாதான்(௩௧)

அண்டர்தருவுக்கு மருங்காமதேனுவுக்குங் ... ... *
கொண்டலதனக்குங் கொடைபயிற்றுசெங்கரத்தான்... (௩௨)

சித்தசராசேந்த்ரன் திருமலைகண்டமன்னன் ... ...*
மைத்துனவேளாக வரும்பெரியநாகேந்த்ரன் ... ... (௩௩)

நீளும்பெருவாழ்வு நீதிகளுமேமேலோங்க ... ... *
ஆளும்புவிபுரக்கு மந்நாளிலேயொருநாள் ... ... (௩௪)

ஆரணஞ்சேர்வையை யருந்தீர்த்தந்தானாடி ... ... *
நாரணனைத்தாள்போற்றி நாமதீர்த்தம்பருகி... ... ... (௩௫)

மிக்ககனகாரியப்பேர் வித்துவசனங்கள்துரை ... ... *
மக்களுடனின்பரச வர்க்கவமுதருந்தி ... ... (௩௬)

சந்தனங்கஸ்தூரி சவாதுகதம்பம்பூசிச் ... ...*
சுந்தரஞ்சேர்முத்தித் தாராயிலங்கப்பாகைகட்டி ... ...(௩௭)

மாணிக்கம்பச்சை வயிரவயிடூரியத்தா ... ... *
லாணிப்பொன்னாற்சமைத்த வாபரணமுந்தரித்து... ...(௩௮)

சங்கீதம்பாடச் சகலசனமும்போற்றச் ... ... *
சிங்காசனக்கொலுவிற் றேவேந்த்ரன்போலிருந்தான் .....(௩௯)

அந்தமணிமண்டபமா மாஸ்தானந்தன்னிலையன் ... ...*
சிந்தையுற்றுவேட்டையின்மேற்சென்றுவரவேண்டுமென்று.( )

கட்டியுணாநோக்கிக் கனவேட்டைக்காரருக்கும் ... ... *
பட்டணத்துச்சேனாபதிகளுக்குஞ்சொல்லுமென்றான்...(௪௧)

அங்கிருந்தகோமா னரண்மனையினுட்புகுந்து ... ... *
தங்கரோக்கென்னத் தயங்குநிசார்தொட்டிறுக்கி ... ... (௪௨)

துப்பட்டாகட்டிவச்ரச் சோடிட்டுத்தூணிகட்டி ....*
பொட்பிட்டார்கச்சை யுடைப்பட்டையூடுகட்டி ... ... (௪௩)

வர்ணமணியாழி வனசமலர்க்கையிலிட்டுச் ... ...*
சொர்ணமயமாய்ச்சமைத்த தோற்கவசங்காலிலிட்டு... (௪௪)

வாய்ந்தவிறைவிட்டால் மருவலர்கள்மார்புறையாப் ... ... *
பாய்ந்தசமுதாடு பாங்கனைத்துவிற்பிடித்து... ... ...(௪௫)

கேழல்புலியானைக் கெர்வங்களையடக்க ... ... *
வாளிமலைமுழைவிட் டாலித்தெழுந்ததுபோல் ... ... (௪௬)

புள்ளிருந்தகூர்நெடுவேற் போசனரண்மனையி ... ... *
னுள்ளிருந்துகோட்டை யொலிமுகத்துவாசல்வந்தான் (௪௭)

கொற்றக்குடைபிடிக்கக் கொம்பூதப்பேரிகையும்... ... ...*
வெற்றிமுரசுந்தொனிக்க வீரசின்னந்தான்முழங்க ... (௪௮)

காலின்கடுமைதனைக் காற்கடுமையாக்குமிதன் ... ... *
காலின்கடுமையெனுங் கந்துகமேற்கொண்டருளி ... (௪௯)

வெற்றிவடிவாள்பிடித்து வெம்பரியின்மீதேறிச் ... ...*
சுற்றமெனச்சுற்றுந் துரைமக்கள்சூழ்ந்துவர ... ...(௫௰)

வீரியட்ரதாளிகளு மெச்சுதளகர்த்தர்களுங் ... ...*
காரியப்பேர்மணிய காரர்கருணீகர்களும்... ... ...(௫௧)

தாக்குதுடிபூழியப்ர தாபவசீகரரும்... ... ...*
ஆக்கமிகுசேர்வை யானகுதிக்காரர்களும்... ... ...(௫௨)

அச்சமில்லாரானுவப்பே ரத்தனையுஞ்சோடுகட்டிக் ... . *
கச்சைகட்டியாயுதமுங் கையுமாய்முன்னடக்க... ... ...(௫௩)

சிங்கத்தையானுலுஞ் சென்றுகுத்திடுமெங்கோமான்... ... ...*
தங்கப்பதக்கந் தனை வாங்கவேண்டுமென்றும்... ... ...(௫௪)

கண்டபெரும்புலியைக் கைவேலாற்கொன்றபுலித் .. ..*
தண்டைமிகுவிருது தான்வாங்கவேண்டுமென்றும்..... ...(௫௫)

துட்டஞ்செயும்புலியைச் சுட்டர்தவெம்புலித்தோ ... ... *
லொட்டும்பரிசைக் குரித்துவரவேண்டுமென்றும்.. ...(௫௬)

வெண்கவரியெங்கள்திம்ம ராயருக்குவீசவெள்ளை... ... ...*
வன்கவரிமானைவெட்டி வால் றுணிக்கவேண்டுமென்றும் (௫௭)

வைத்திடும்வைப்பாட்டிபிள்ளை மார்புக்குடைமைபண்ணக் *
குத்திப்புலிநகங்கள் கொண்டுவரவேண்டுமென்றும்... (௫௮)

கொண்டைவிளைய குடியாள்முடிமயிர்க்கு ... ... *
மண்டுகருங்கவரி வால்றுணிக்கவேண்டுமென்றும்... ...(௫௯)

வாய்த்தகரடிமணியீரத்பிச்செடுத்துக் ... ... *
கூத்திக்கிடுமருந்துகூட்டியிடவேண்டுமென்றும்... ...(௬௰)

ஒன்றொன்றொருவர்மனதிற்றுச்சிலரோக ... ...*
வென்றிவெடிக்காரர்வேற்காரர்முன்னடக்க .. .. (௬௧)

தானைபிடித்தசவளப்பெருக்கமுயர் ... ...*
வானம்விழுதுவிட்டவண்ணமாய்முன்னடக்க ... ... (௬௨)

கொண்டேகுந்தன்மேளக்கொள்கைபோற்பேசுமுகி ... ...*
லுண்டோவில்லையோவென்றொட்டகமனைந்துவர ... ... (௬௩)

கொட்டுந்துடியுங் குறித்தகரிக்கொம்புகளுங் ... ...*
கட்டும்பெருவலையுங்கைவேட்டைக்கத்திகளும்... .. ... (௬௪)

காட்டுப்புலிக்கழுத்தைக்கௌவும்புலிபோலக் ... ...*
கூட்டமிட்டஞாளிகளுங்குத்தீட்டியுங்கவணும் .... (௬௫)

சால்வயிறுமூன்றுமுழத்தாடிகளுஞ்செந்தலையுங் ... ...*
காவிவிடுதோலடியுங்காங்கிட்டகச்சையுமாய்... ... ... (௬௬)

கானவர்கள்வந்துகண்டுகைகுவித்துமுன்னோடச் ... ...*
சேனைநடுவெள்ளைச்செயடாலிணைத்துவர ... ...(௬௭)

போயனுமன்பாய்ந்தபுகழ்ப்பெருமற்கதிணைப் ... ...*
பாயத்திரிவதுபோந்லைபைங்கருட்டாலேக ... ... (௬௮)

சந்த்ரோதயம்போற்றயங்குஞ்சுருட்டிவரச் ... ... *
செந்தூளிகண்டுவேடசினங்குடிவாங்க ... . (௬௯)

தம்பட்டவோசைதனக்குமகதங்கலங்க ... ...*
கொம்புத்தொனிகேட்டுக்கொச்சிமலையேற ... ... (௭௰)

மங்களஞ்சேர்பெத்தைநகர்வாழ்பெரியநாகேந்த்ரன் ... ... *
எங்கள்பிரான்வேட்டைக்கெழுந்தருளுமவ்வழியில் ... ... (௭௧)

போத்தொன்றிடத்திருந்துபோய்வலத்தோர்பூமரத்தில் ... .*
வாய்த்தபேடொன்றைமருவிக்குரலெழுப்ப ... ... (௭௨)

மண்டலிகர்கண்டனெனுமால்பெரியநாயகவுத் ... ...*
தண்டமதுகண்டுநகைதந்துமனமகிழ்ந்து ... ...(௭௩)

ராசசகுணமென்னராசேந்த்ரன்முன்னோடி ... ...*
யோசனையிருந்சகுனவுண்மையறிந்தானொருவன் ... ... (௭௪)

வந்தெதிரேபோத்துவலம்பாயக்கண்டதனால் ... ... *
முந்தவிந்தவேட்டைமுழுவேட்டையாய்க்கிடைக்கும் ... ... (௭௫)

குக்கில்வனப்பேட்டைக்குரலெழுப்பிக்கூடியதாற் ... . *
கைக்குள்வசமாகவின்றோர்கன்னிமணங்கூடுமென்றான் ... ...(௭௬)

அவ்வார்த்தைசொல்லமகர்ராசனுங்கூளேந்த்ரன் .... *
மைவாய்த்தபன்றிமலைச்சாரல்வந்தணுகி ... ... (௭௭)

நாலிடமுங்கானவனாநாடிவலைகட்டவிட்டு ... ...*
கோவியகப்டாப்பிற்குழற்காரரைநிறுத்தி ... ...(௭௮)

எறும்பரிவிட்டிறங்கிப்படைக்கலிப்பு ... ...*
மீறுந்தொனிமுரசுமேகங்கள்போன்முழங்க ... ... (௭௯)

வேலாளரும்வில்லாளரும் வெல்லுமெறியீட்டிக்... ... ...*
காலாளுமாய்ப்பரந்து காட்டைக்கலைத்துவிட்டார்... ... ... (௮௰)

பன்றிமுயல்கரடி பாய்புலிபுல்வாய்கடமா ... ...*
ஒன்றொன்றுதட்டுண்டுலைந்துகலைந்தோட... ... ...(௮௧)

எய்வாரும்வேலா லெறிவாருமொன்றையொன்றை.. ... ... *
வைவாருஞ்சுற்றி மறிப்பாருமாய்நெருங்க ... ... (௮௨)

கட்டாப்பில்வந்தகடமாலைப்பின்வாங்க ... ... *
ஓட்டமற்குத்தியொளியிருந்தபேரிழுக்க ... ... (௮௩)

சுட்டபுகைவழியேதூக்கவருப்பன்றியுடல் ... ...*
தட்டுருவியோடத்தகட்டலகில்வேல்பாய ... ... (௮௪)

வாலடித்துமேல்பதுங்கிவாய்பிளக்கவாய்கிழிக்க... ...*
வேல்பிடித்துவீரர்குத்தவீழ்புலிக்குமேல்துடிக்க(௮௫)

வலையில்விழுகரடிமுயல்மரையின்மிசைஞமலிவிழ ... *
அலகின்மிசைபிடரின்மிசையடிகள்விழவுடல்பதற (௮௬)

செவ்வியோன்வேசிகையிற் சிக்கியுழல்வதுபோற்.....*
கவ்வியநாய்க்காலிற்கவரிமான்வீழ்ந்துழல ... ...(௮௭)

கூடுமயிர்க்கூட்டங்கொடுக்கின்றதாதாவைப்... ... ...*
பாடும்புலவோர் கவிபோற்பறந்தோட... ... ...(௮௮)

வட்டமுலைமின்னார் மயக்கறுத்தயோகியைப்போற் ...*
கட்டுவலையறுத்தோர்சரன்மேதிபோனதுவே ... (௮௯)

கொட்டமிடும்புலியைக்குண்டீதுன்றுங்குழலால் ... ...*
சுட்டதொனிவெந்நைபத்தொடர்ந்துசிலையோட ... (௯௰)

எம்மானிடப்புலியு மிந்துமுயலும்மானும்... ... ... *
கைம்மானுஞ்சற்றேகலங்கிமனந்தேற ... ...(௯௧)

இவ்வண்ணமைய னியல்வேட்டையாடவொரு ... ... *
செவ்வண்ணமான்வலையிற் சிக்காமலேகுதித்து... (௯௨)

பற்றிவரும்பேர்க்கும்பதிகுழற்குமெட்டாமல் ... ...*
உற்றகவிவாணனைக்கண்டோடுமுலுத்தனைப்போல். (௯௩)

போங்கடுமைகண்டுபுகழ்பெரியநாகேத்ரன் ... ... *
வாங்குசிலையும்வடிக்கணையுமாய்விரைந்து ... ... (௯௪)

மானோடப்பற்றியன்றுவந்தரகுராமனைப்போல்... ...*
தானோடப்பின்னோடித்தாவிக்குதிகுதித்து ... ... (௯௫)

பாரிவிறகில்லாதபட்சிபோற்செல்லநெடுந் ... ... *
தூரந்தொடர்ந்து தொடுங்கணைக்குப்பூசையிட்டான் ()

மால்தொடர்ந்தமானோர்மயிலைப்பிரித்ததையன் ... ...*
கால்தொடர்ந்தமானோர்கருங்குயிலைக்கூட்டியதே (௯௭)

சிங்கத்தின்குட்டிசிலையேந்திச்செல்வதுபோல் ... ... *
அங்கொருபூங்காவில்விடாயாறத்தனிப்புகுந்தான் (௧௮)

துன்றுவடஞ்சுனைநீர்தோய்ந்துமலர்ந்தாதளைந்து......*
தென்றல்வந்தெனையன்திருமுகத்தின்வேர்வகற்ற (௧௯)

கற்பகக்காவிந்திரக்கண்டுமலர்சிந்துதல்போற் ... ...*
பொற்புடையோன்மெய்குளிரப்பூங்கானம்பூச்சொரிய*

சந்தனத்தின்மீதிருந்துசஞ்சரிக்கும்பைங்கிளிகள் ... ...*
சிந்தமன்சேய்க்கின்பம்வரச்சிந்துகவிபாட ... ...(௨௧)

இங்கிருக்கும்வேளைநல்லவேகாந்தவேளையென.... ...*
மங்கைநல்லாள்தூதுவிட்டவண்டுபோல்வண்டினாய...()

மையல்கொண்டமன்னனுக்குமாலையிடவந்துநின்ற...*
தையலார்போலச்சூரக்கொன்றைக்கொம்பிலங்க ...(௨௩)

நங்கோன்துரைபெரியநாகேந்த்ரனவ்வனத்தில் ... ...*
சிங்காரம்பார்த்துலவிச்சித்தைமகிழ்போதில்... ...(௨௪)

சாதியொருநான்கின்முதற்சாதிபதுமினியா... ... ... *
மாதுநவரத்னமாலையெனும்பெண்பெருமாள் .... (௨௫)

மதனகலைவாணிமதனசுரதாணி ... ...*
மதனரதிக்கேணிமதனசுபகல்யாணி ... ... (௨௬)

காமகுருபீடங்காமக்கொலுக்கூடங் ... ... *
காமகிரீடமின்பக்காமக்கடலோடம் ... ...(௨௭)

மாமுனிவர்வேதவங்கமாமுனிவரந்தரங்க ... ... *
மாமுனிவருதுசங்கமாமூவர்பிராணலிங்கம் ... ...(௨௮)

தேவரதிதேவிதெய்வகுணவாவி ... ... *
தெய்வச்செழுங்காவிதெய்வமலைச்சஞ்சீவி ......(௨௯)

கம்மியன்கைபாலடித்துக்காச்சிவெட்டித்திராமல் ... *
செம்மல்மோகன்கைம்மலராற்செய்துவிட்டபோற்பாவை

வாய்பேசர்வண்ணமதிலொட்டிநில்லாமல் ... ... *
தாய்பேச்சப்பேசியின்பந்தந்துலவுருபசித்திரம் ...(௨௰௧)

கையாற்பிடித்தொருவர்கட்டவிதழ்கன்றுமல் ... ... *
மையார்குழலார்மடியிருக்கும்பூமாலை ... ...(...௨௰௨)

காற்றிலடிபட்டலைந்துகண்ணூத்தரும்பாமல் ... ... *
போற்றிமடவார்வளர்த்தெடுத்தபூங்கரும்பு ......(௱௰௩)

மொய்க்குமணங்குன்றிமுசங்கருகிவாடாமல் ... ... *
மொய்க்குமணமெந்நாளும்வீசுமருக்கொழுந்து(௱௰௪)

பொங்கிச்சிவந்தூகறுத்துப்பழுங்காமல் ... ... *
தங்கநிறமாகச்சமைந்தமணப்பாகு ... . (௱௰௫)

ஓங்குமலைக்காட்டினுள்ளிருந்து தூங்காமல் ... .*
தூங்குசப்ரமஞ்சமிசைதூங்குநவாசத்தேன் ... (௱௰௬)

மொய்த்தமலைக்காட்டுமுள்ளூடலையாமல் ... ... *
மெத்தையின்மேலேறிவிளையாடுந்தோகைமயில் (௱௰௭)

கொம்புதொறும்போய்த்தாவிக்கூவித்திரியாமல் ... *
அம்பொன்மணியூசலிருந்தாடுங்குயிற்பேடு ...(௱௰௮)

கொஞ்சிமொழிகுழறிக்கூட்டிற்கிடவாமல் ... ...*
செஞ்சொன்மதனகலைசெப்புங்கிளிப்பேடு ...- (௱௰௯)

கன்னியர்க்குத்தன்னடையைக்கற்பித்தபேடையன்னந்*
தன்னைநடைபயிற்றுஞ்சாதியனப்பேடு ... ... (௱௨௰)

தேய்ந்துபோகிக்கச்சேர்ந்தகுணம்போகாமல் ... ... *
தோய்ந்துபோகிக்கத்துலங்குகின்றசாதிமுத்து...(௱௨௧)

ஒப்பமிட்டசெப்பிலொளித்துக்கிடவாமல் ... ... *
செப்பமிட்டசெப்பிரண்டுந்தாங்கிவருஞ்சீவரத்னம் ...()

நீறுனகாமணிமலனூர்மீதில்வைத்த ... ... *
மாறுமனவயிரமாற்றவருமாவயிரம் ... ...(௱௨௩)

கண்ணுக்குட்கண்மணிபோற்கண்மணிக்குட்பாவையைப்போற்
பெண்ணுக்குப்பெண்ணாசைகொள்ளவந்தபெண்ணரசு ()

அன்றுகுணமாலையெனுமன்பானபாங்கியைப்பார்த் ... *
தின்றெனதுகண்ணிவிடக்கண் துடிக்குதென்றாள்(௱௨௫)

தோளிளிடப்பால் துடிக்குதெனவுரைத்த ... ... *
வாளிநெடுவெட்டுப்படித்தவரிவிழியாய் ... ... (௱௨௬)

கன்னிபழியாதகாரிகையேயின்றனக்குச் ... . *
சென்னைனநிகரபசோபனமுண்டாகுதென்றாள் (௱௨௭)

பாங்கியுரைகேட்டுமற்றைப்பாங்கிமார்தம்முடனே... ... *
பூங்குழலாள்காவின்மலர்பூவெடுக்கவேண்டுமென்று ... ...[௱௨௮]

பச்சைப்பரிமளங்கள்பாங்காய்க்கலந்தரைத்த ... ... *
கொச்சிமஞ்சட்பூசிக்குளித்ததிருமேனியின்மேல்... ... ...[௱௨௯]

சாந்துபுழுகுசவாதுகதம்பம்பூசிச் ... ... *
காந்திதரவெள்ளைசலவைகண்டையிட்டசேலைகட்டி ... ...[௱௩௰]

காவிவரிநெடுங்கட்காரிகைக்குப்பாங்கியர்கள் ... ... *
சீவிவகுப்பெடுத்துச்சேர்த்துக்குழன்முடித்து ... ... [௱௩௧]

மையெழுதிப்பொட்டெழுதிவட்டமிட்டபூண்முலைக்குத்... *
தொய்யிலெழுதித்துணையடிக்குப்பஞ்செழுதி ... ...[௱௩௨]

ஆடகப்பொன்மெட்டிட்டழகுவெள்ளித்தண்டையிட்டுப் *
பாடகங்களிட்டுப்பசும்பொற்சதங்கையிட்டு ... ...[௱௩௩]

முத்தாரமேகலைமேன்மூன்றடுக்குப்பொன்னரைஞாண்... *
வைத்தாரக்கடிமருங்கொட்டியாணமிட்டு ... ... [௱௩௪]

செய்யகொடிப்பவளஞ்செம்மணிகளீன்றதுபோல்... ... *
கைவிரலுக்கேற்கரத்னக்கல்மோதிரங்களிட்டார் ... ...[௱௩௫]

கடிப்பவளங்கனகவளைபொற்கடகந் ... ... *
தடுச்சரியைச்சரியாகக்கைக்கணிந்து ... ... (௱௩௬)

படுரவிக்கையிட்டுப்பட்டையப்பொற்காறையிட்டு ... *
வட்டமுலைமார்பிலங்கவச்ராச்சவடியிட்டார் ... ...[௱௩௭]

மோகனப்பொன்மாலையிட்டுமுத்துமணிமாலையிட்டுப் ... *
பூகத்தைவச்ரமணிப்பூஷணங்களால்மறைத்தார் ... ...[௱௩௮]

வாய்க்குமொருவட்டமதியொருமுத்தீன்றதுபோல் ... ... *
மூக்குத்திமுத்துமுகத்துக்கிணங்கவிட்டார் ... .[௱௩௯]

கொந்தளப்பொன்னோலையிட்டுக்கொப்பிட்டுவாளியிட்டுச் *
செந்திருவிற்கேற்கத்திருவும்பிறையுமிட்டு ... ... [௱௪௰]

கொண்டைச்சுருட்டுமுத்துக்குச்சிட்டுக்குப்பியிட்டுத் ... *
துண்டப்பிறைக்கிணையாகச்சுட்டியொன்றுகட்டிவிட்டார் ....[௱௪௧]

பூட்டினார்பொற்சிலைக்குப்பொன்னிடுவார்போலுடைமை *
சூட்டினார்பூமாலைசுற்றினார்தோழியர்கள் ... ...[௱௪௨]

ஞாலம்புகழுநவரத்னமாலையின்னாள் ... ... *
கோலஞ்சிறந்தமலர்கொய்யவென்றுதானடந்தாள் ... ... [௱௪௩]

வங்காரமாலைமுத்துமாலைகுணமாலை ... ... *
சிங்காரமாலைதிகழ்மோகனமாலை ... ... [௱௪௪]

சம்போகவல்லிசரசவல்லிகாமவல்லி ... ... *
அம்போருகக்கண்ணமிர்தவல்லிநீலவல்லி ... ... [௱௪௫]

மோகரத்னமாதுரத்னமுத்துவசந்தரத்னே ... ...*
நாமரத்னமென்னுமந்தநல்லவுயிர்ப்பாங்கியரும் ... . [௱௪௬]

தானுமாயந்தமலர்ச்சண்பகப்பூங்காவனத்தின் ... . -*
மானினங்கள்சூழவரும்பிடிபோல்வந்தணுகி ... ... [௱௪௭]

கொய்யுமலர்வண்டெழுந்துசேர்கனப்பூவெனச்செங் ... *
கைகம்மலனாச்சாற்றக்கடுகிமலர்ப்பூவெடுத்தாள் .... [௱௪௮]

பூங்கொடிபோல்நின்றுலவிப்பொன்னனையாள்பூவெடுக்கப் *
பாங்கிமாரெல்லாம்பரந்தோடிப்பூவெடுத்தார் ... ... [௱௪௯]

வாளையொத்தசெங்கருங்கண்மானார்மதாசன் ... . *
பாளையத்தைக்கொள்ளையிடும்பண்பாய்மலர்பறித்தார். ...... [௱௫௰]

அங்குநின்றபெண்களெல்லா மங்கங்கேபோய்மறைய ... *
இங்குநின்றபேதை யினம்பிரிந்தமான்போல... ... ...[௱௫௧]

மெல்லத்தனிநடந்து வெட்சியிருவாட்சி ... ... *
மல்லிகைசெவ்வந்தி மலர்ந்தபிச்சிப்பூவெடுத்து... ... ... [௱௫௨]

தோட்டிப்பூமுல்லைமுதற் றாயகொடிப்பூவெடுத்துக்... ...*
கோட்டுப்பூமீதிலந்தக் கொம்பனையாள்மாலானாள் ... ... [௱௫௩]

காவியிரண்டிருக்கக் கஞ்சமலரஞ்சிருக்க... ... ... *
பூவினிறங்குன்றப் புனமுருக்கம்பூவிருக்க ... ... [௱௫௪]

சேங்கரும்பிரண்டிருக்கக் கோவையிட்டமுல்லைமுகைப் *
பூங்குமுதத்துள்ளிருக்கப் பூஞ்சண்பகமிருக்க ... ... [௱௫௫]

பூதலத்திலேதான் பொதிவைத்திரப்பவர்போல்... ... ...*
மாதாசிபூத்த மரந்தோறுஞ்சென்றுசென்று .... [௱௫௬]

சாதிநறுஞ்சண்பகமே தாதுளபூந்தாதகியே ... ... *
கோதிக்குழல்முடிக்கக் கோலமலர்ந்தாரீரோ... ... ... [௱௫௭]

மந்தாரையேசெருந்தி மாமரமேநீயானது... ... ...*
சந்தாபந்தீரத்தரிக்கமலர்த்தாரீரோ ... ... [௩௫௮]

பாதிரியேகாவிற் பனிநீர்ப்பருமரமே ... ...*
மாதவியேநீரெனக்கு வண்ணமலர்த்தாரீரோ... ... ...[௩௫௯]

விண்ணூர்ந்தபுன்னை விருட்சமேகுங்குமமே... ... .*
அண்ணாந்துநீர்க்குமெனக் கானமலர்தாரீரோ... ... ...[௩௬௦]

அம்பிட்டகண்ணா ரகன்றுவிட்டாருங்களைநான்... ......*
கும்பிட்டேன்கோகிலங்காள் கொய்துமலர்தாரீரோ ... ... [௩௬௧]

என்றவுரைகேட் டெழிற்குயிலும்பூங்கிளியுங் ... ... *
கன்றிமனநாணியந்தக் காவின்புறத்தொதுங்க ... ... [௩௬௨]

பூமரத்தினிழலிலோர் பூங்கொடிபோ னின்றலவித்... ... *
தாமநறுங்குழலி தானொருத்தியாகிநின்றாள்... ... ... [௩௬௩]

ஏந்துமிளமுலைப்பெண் ணேகாந்தமாயிருக்க ....*
நாந்தகவீரன்பெரிய நாகமகூளேந்திரனை ... ... [௩௬௪]

பண்டுதனைவென்ற பகைதீரக்காமனுருக் ... ... *
கொண்டுசிவனைவெல்லக் கூரம்புதேடுதல்போல் ... ...[௩௬௫]

வண்டுலவும்போது மலர்ந்தபெருஞ்சோலைவளங் ... ... *
கண்டுலவும்போதிலெதிர் கண்டாள்விழிகுளிர ... ... [௩௬௬]

தீரமின்றோளோ திசநாகக்கன்னிகையோ ... ...*
சூரமின்றோளோ சுரலோகமேனகையோ... ... ...[௩௬௭]

கண்ணிமையுமன்னிவிட்டா காளுமனந்திகைத்த ... ... *
வெண்ணமகற்றியதா விவ்வுலகிற் பெண்ணரசே ... ...[௩௬௮]

என்றெடுத்துமின்னா ளிருசெவிக்குமின்பமுறக்... ... ...*
குன்றடுத்தபூங்காவிற் கோமானுரைக்கலுற்றான்... ... ... [௩௬௯]

உனரோதிருக்கு முலகேதுமதுதிருப் ... ...*
பேரோதுவார்த்தையொன்று பேசினலாகாதோ... ... ...[௩௭௦]

ஐவிரலுக்குள்ளே யமர்ந்தசிவனார்க்குத்... ... ...*
தெய்வவடிவெடுத்த சேயிழையுநீர்தாமோ... ... ...[௩௭௧]

பந்தெழுப்புங்கையாற் பரனெரித்தமன்மதனை... ... ...*
ந்தெழுப்பிக்கொண்ட மகராசிநீர்தாமோ... ... ... [௩௭௨]

பண்டுநளனுருபம் பலரெடுக்கவேநளனைக்... ... ...*
கண்டுமணமாலையிட்ட காயக்கிநீர்தாமோ... ...(௱௭௩)

தெய்வரம்பையின்னுர் திருவடிகெலாந்திரட்டிக் ... ...*
கைவருந்தவேதனுமைக் கற்பித்துவிட்டானோ...(௱௭௪)

என்பட்டமென்றவரு மிந்திரனூர்பட்டமெலாந்... ...*
தன்பட்டமாக்குஞ் சமத்தியார்நீர்தாமோ... ...(௱௭௫)

தெண்டிரையிலோடிமலைச் சென்றேறிவாய்வெருவிக்...*
கொண்டல்திரிவதுங்கள் கூந்தலுக்குத்தோற்றலவோ ()

தேய்ந்தபிறையுங்கள் திருநுதலென்றாலதிலே ... ... *
ஆய்ந்தமணிச்சுட்டி யணிந்திருக்கக்காணேனே (௱௭௭)

பூமன்வளைத்த புருவத்துக்கந்தரதி ... ...*
காமன்வளைத்த கரும்புருவமொப்பாமோ ... (௱௭௮)

அவ்வேதங்கொண்ட வருங்கயல்போல்வேதனினி... ...*
எவ்வேதங்காணப் படைத்தானிருவிழியை... .... (௱௭௯)

சன்னதவேள்தீர்த்திப்ர தாபம்புரிந்தகொலை... ... ...*
வன்னமென மூன்றமிருப்பதுங்கள்வாள்விழியே(௱௮௰)

வல்லையப்போருக்கொதுங்கேன் வாள்வேல்படைக்கொது
ங்கேன்-மெல்லிதல்லீருங்கள் விழியம்புக்கச்சமுற்றேன்.

தூக்குமூக்குத்திமுத்துத் தூங்காக்குமிழையுங்கள்......*
மூக்குக்குவமைசொன்னல் முத்தமிழோர்க்கொவ்வாதே

மாங்கனிபோலமென்றும்வள்ளைசாதொக்குமென்றும்*
பாங்கிலுமைகண்டேன் பல்வரிசைக்கெஞ்சொலுவேன்()

வித்துருமந்தன்னையுங்கள் மெல்லிதழென்றுவிதிலே...*
முத்தங்கிடைக்குமதில் முத்தங்கிடையாதே......(௱௮௪)

உபமானமென்றுமலையீரித்துமுகத்திற்கோர்... ... ...*
உபமானஞ்சொல்ல வொருபொருளுங்காணேனே ...()

சங்கமுத்துமுங்கள் தனிக்கழுத்தென்றாலுதிரால்... ...*
அங்கழுத்தும்ரேகை யதிற்பதியமாட்டாதே... (௱௮௫)

தோளுக்குமூங்கிலிணை சொன்னாற்பெருஞ்சோதி......*
தாளுக்குமின்மினியை நாவலருஞ்சொல்லாரோ...(௱௮௭)

காந்தள்வனஞ்சென்றதுங்கள் கைபோலுந்தானிருக்க *
பாய்ந்துதவஞ்செய்து வரம்பெறுவேமென்றலவோ ...()

தம்புருவைமீட்டியிசைத் தந்திதனிலேற்றறியாச்.......*
செம்பவளமுங்கள் சிறுவிரலுக்கொப்பாமோ... (௱௮௯)

வார்த்தைக்குத்தோற்ற வனக்கிளியின்மூக்குமுனை ... *
சேர்த்தநகமென்றுவமை செப்பினாலொப்பாமோ ..()

பாவினியல்கண்டு பலபாடித்தெரிந்துபெருங் ... ... *
காவியத்தைப்பாடிக் கவிஞராங்கேற்றுதல்போல் (௱௯௧)

முந்தச்செழுங்கமலத் துள்ளேமுளைத்தெழுந்தேன் ...*
தந்தச்சிமிள்படைத்துத் தாளவட்டந்தான்படைத்து ()

வம்பைச்சமைத்து வடிவுகண்டுமால்யானைக் ... ... *
கொம்பைச்சமைத்துக் குணஞ்சற்றதிலறிந்து...(௱௯௩)

தேங்காயைச்செய்து திரட்சிகண்டுபொற்குடத்தைப்...*
பாங்காகச்செய்து பணைப்பதிலேகண்டறிந்து .. (௱௯௪)

விந்தைதருமேருமுதல் வெற்பெல்லாஞ்செய்தவன்கை*
வந்ததற்பினுங்கள் வனமுலையைச்செய்தானோ (௱௯௫)

காமனிமையாமல்வைத்த கண்கறுப்புப்பாய்ந்ததுவோ*
வாமமுலைக்கண்கண் மணிக்கறுப்பையென்சொலுவேன்.

சூரியனுமிந்திரனுந் தும்பிமுகத்தோனுமங்கள்... ...*
பாரமுலையின் பகையடக்கவோபிறந்தார் ... ...(௱௯௭)

ஆலோலவயிறுதனி லாலிலைமேற்பள்ளிகொள்ளு ... ...*
மாலோவுரோம வகுப்பழகையென்சொலுவேன் (௱௯௮)

வந்திச்சுழியை வலமாகச்சுற்றிலுநீ... ... ...*
குந்திச்சுழிகளுங்க ளுந்திச்சுழியாமோ ... ... (௱௯௯)

மெல்லிநல்லீருங்களிடை மின்கொடிபோலுண்டெனவு *
மில்லையெனவும்படைக்க விரண்டுபிரமனுண்டோ (௨௱)

வாமமுதற்சாதி வடிவிலலல்குலுஞ்செந் ... ... *
தாமரைப்பூப்போலிருக்குஞ் சந்தேகம்வேறுமுண்டோ.

வாழைக்குறங்கல்குல் மண்டபமாமன்மதனுக் ... ... *
கேழைக்கிரங்கு மிடமென்றறியேன்... ... ... (௨௱௨)

செவ்வராக்கவ்வி நின்ற சீரலவனேமுழந்தாள் ... ... *
அவ்வாரலைச்சுமந்த வாமையோபொன்னடிதான் (௨௱௩)

அஞ்சுதலையரவோ வஞ்சுவிரனும்படமோ ... ... *
மஞ்சுவரக்கண்ட மடமயிலோவுன்சாயல் ... ...(௨௱௪)

பின்னழகைக்காணில்ரதிப் பெண்ணைமதனுடுவனே ... *
முன்னழகைக்காணின் முனிவர்தவஞ்செய்வாரோ ...()

சேடிபருமில்லாமற் றேன்மொழியீரிவ்வனத்தில்......*
நாடிவரப்பெற்றதுமுன் னான்செய்தமாதவமோ......()

ஏதுமொருவார்த்தை யியம்புகிலீருங்கனுணா ... ... *
வேதமோகல்லாலின் மேவுசிவமந்திரமோ... ... (௨௱௭)

மேருகிரியுமந்த வெள்ளிமலையும்பார்க்க... ... ...*
நீருத்தரீக நெகிழவிடமாட்டீரோ... ... ...(௨௱௮)

பையணைவைத்துங்கள் கழுத்தின்மணமோந்துகொண்டா
லீ, ஐயமறச்சங்கமுக மாமும்பலனலவோ... ...(௨௱௯)

பூனைநற்றுகில்சற்றே புறம்போகச்செய்துவிட்டால்...*
அனந்தசயனத்தலத்தை யானறிந்துகொள்ளேனோ ...()

நாகம்தழுத்தமொன்று தந்தாலுமதுசக்ர ... ...*
வாக்குமலைக்குழுத்த மாலையாச்சூட்டேனோ ... (௨௱௰௧)

என்மார்பிலங்கநக ரோசையைவைத்தாலுமது ... ... *
பொன்மார்பிலங்கரத்ந பூஷணமாய்ப்பூட்டேனோ ... ()

பாதியுடலிற் பாமனொருபெண்ணைவைத்தான் ... ... *
மாதொருத்திதன்னை மணிவண்ணன்மார்பில்வைத்தான்()

செங்கமலவேதனொரு தேமொழியைநாவில்வைத்தான் *
உங்களைநானென்மனதுக் குள்ளிருத்திக்கொள்ளேனோ()

வாமத்தரவுமுலை மந்தரமுந்தந்தானுன்... ... ...*
காமக்கடலைக் கடைந்தமிர்தங்காட்டேனோ ... (௨௱௰௫)

பட்டாடைக்காமன் குளத்தையென்றபாரிசமா ....*
விட்டால்முப்போக விளைவெற்றிக்கொள்ளேனோ ... ()

வர்ணழையடிமுக்காணி வட்டமெனக்களித்தால் ... ... *
ஏன்ழபுழுதுபயிரேற்றிப்பிழையேனோ ... ... (௨௱௰௭)

வற்றாச்சமுத்திரமா மாரனரண்மனைக்குள் ... ...*
அவ்பதாந்திரமெழுதி யாண்மைசெலுத்தேனே(௨௱௰௮)

ஆலடிச்செய்யோட ரசடிவட்டம்விட்டால்மூச் ... ...*
சாலடித்துநல்வெள்ளைச் சம்பாவிளையேனே (௨௱௰௯)

தாண்டியிருசத் தனிமேவேட்டைவந்தவெனை ... ... *
மீண்டுமொருகாம வேட்டைவிளையாடவிட்டால் (௨௨௰)

கொரங்கைகமலைபற்றிக் காலெழுப்பியேறிநடுப் ... ... *
பொங்குகலைகுலையப் புல்லுமனையுள்ளாக்கி... ...(௨௨௧)

சாய்ந்தவிழிமானிரண்டுஞ் சண்பகக்காட்டிற்குதித்துப்*
பாய்ந்துகுயிலோடொதுங்கி நின்றுபரதவிக்க (௨௨௨)

மோகவலைக்குழயத்திக்குமின்பமுற ... ... *
வாகமலைப்பன்றியடுத்தொருகைபாரேனே ......(௨௨௩)

மன்னிப்பாயென்னைவரவழைத்துநீருமது ... ... *
கன்னிப்போராகக்கலவிப்போர்க்கென்னைவிட்டால்... ()

காமத்தேரோடிநன்றாக்கட்டியிறுகக்கலந்து ... .*
தாமம்வல்பாயச்சுமரின்முனைகாட்டி ....(௨௨௫)

முன்னணியும்பின்னணியுமொய்த்தகுழல்வகுப்பும்... *
பின்னிடநன்றாவிடைப்ரதாபக்கொடியாட ... (௨௨௬)

தன்னடையொலிமேளந்தாளநெகிழ்ந்தகுழல்... ... ...*
வண்டுபுறங்கொடுத்தமாற்றலர்கள்போற்பறக்க...(௨௨௭)

வெம்பியெனைப்பாய்ந்தடரவிட்டதனபாரமெனும் ... *
கம்பமதயானைதனைக்கைப்பிடியாகப்பிடித்து...(௨௨௮)

சங்கமுழங்கச் சரிபோகப்போர்முடித்து ... ... *
செங்கைக்கரும்புச் சிலைமதனைவெல்வேனே......(௨௨௯)

மேலுலகந்தன்னைவிட்டு மேதினியில்வந்தரம்பை, போ
லொழுக்கள்யௌவனமாம்பொய்கைதனிலென்னைவிட்டால்

ஆடையொருபக்க மணைபிற்கிடக்கவிதழ் ... ... *
மூடியிரண்டு முளரிகளென்மார்பழுந்த...... ...(௨௩௧)

ஓர்தாமரைப்பூ வுகந்தென்முகத்தணைய ... ...*
ஓர்தாமரைப்பூ வுலாவிமுழுதைந்நடவ ... ... (௨௩௨)

பின்னொருசெந்தாமரைப்பூப் பின்பிடரினூடுவரக்... ...*
கன்னிவாரந்தோடு கலந்திடுப்பினூடொதுங்க.. (௨௫௩)

என்மீதுதாவி யிருகெண்டைபோராட ... ...*
மென்மாமலர்க்குமுத மெல்லமெல்லத்தேனூற (௨௫௪)

சைவலமோர்பாற்குலையச் சங்கொலிப்பவீழ்ந்தெனது*
மெய்குளிரத்தோய்ந்து விரகவிடாய் தீரேனோ...(௨௫௫)

தங்கவிளையாட்டுத் தனிப்பீடமீதுசது ... ...*
ரங்கவிளையாட்டுக் களைத்தீரோயாமாகில் ... ... (௨௫௬)

கால்பலன்கொண்டேற்றியிரு காரானைமுட்டவிட்டு ...*
தாலுமுகத்து நடத்துபரிசுற்றவிட்டு... ... ...(௨௫௭)

எட்டெட்டினுக்கு மிணங்கச்சகடேற்றித் ... ... *
தொட்டதொட்டவாட்டமெலாந்தோலாமல்வெல்லேனே

காதோடுவாதாடுங் கண்மடவீரொன்றியிலே... ... ...*
சூதாடவென்னைவரச் சொல்லியழைத்தீராகில் ...(௨௫௯)

குங்குமக்காய்ச்சோடிரண்டுங் கூட்டிக்கலந்தாடி... ...*
அங்கம்பசலைக்கா யத்தனையும்போகவிட்டு... ... (௨௬௰)

விந்தைதருஞ்சிவப்பை மெல்லவரதிறுத்தி ... ...*
அந்தக்கறுப்பையெல்லாம் பின்னையலையவிட்டு (௨௬௧)

ஒருக்காலிருக்காலோ டொப்பாறுமாறும் ... ...*
பெருக்காலக்கம் பிசகாமலேயாடி ... ... (௨௬௨)

கண்பார்த்துநீங்கள்வெட்டிக் கட்டித்தொடர்ந்தேறிப் *
பண்பாகவீட்டிற் படுத்துவிளையாடேனோ... ...(௨௬௩)

நற்காமபூசை நடத்திடவேநீங்கள்சொன்னால் ... ... *
விற்காமதெய்வ விரதந்தனிவிருந்து... ... ... (௨௬௪)

மோகசமுத்திரத்தின் மூழ்கிமதன்மந்திரமும் ... ... *
ஆகவுருவேற்றி யந்தக்கரணமுடன்... ... ... (௨௬௫)

கன்னலொடுதேமாங் கனியருந்திச்செவ்விளநீர் ... ...*
தன்னைப்பருகித்தாச் சத்துருவைத்தானகற்றி (௨௬௬)

சாமஞ்சாமந்தோறுஞ் சங்கநாதத்துடனே... ... ...*
நேமமொடுபூசை நிறைவேற்றிக்கொள்ளேனோ (௨௬௭)

இன்னேரமென்சொற் கிரங்குவீரொப்படியும் ... ...*
மின்னையுமைக்கலந்து மேவாமற்போவேனோ... ... ... [௨௪௮]

ஓடிவலைகட்டி பொதுக்காமலேயெளிதில்... ... ... *
நாடியபொன்மானை நான்விட்டகல்வேனோ .. .. [௨௪௯]

தாப்பானகாடேற் தடவனாயுஞ்சுற்றாமல் ... ... *
வாய்ப்பாகவந்த மயிலைவிட்டுப்போவேனோ... ... ...[௨௫௰]

விண்டுநறுந்தேன்சொரியு மென்கமலப்போதுகண்ட ...*
வண்டுபடிந்துண்டு மகிழாமற்போவதுண்டோ ... ... [௨௫௧]

காந்தர்வநியாயமெனக் கண்டவுடனேயிணங்கித் ... ... *
தோய்ந்துமிகல்யாணமகா சோபனகல்யாணமன்றோ ... ...[௨௫௨]

கானரும்வள்ளிதனைக் கந்தனார்கூடியதும்... ... ... *
மானாள்சுபத்திரையை வாள்விஜையன்கூடியதும்... ... ... [௨௫௩]

தாங்களேசம்மதித்தோ தந்தைதாய்சம்மதித்தோ... ... *
பாங்குயிலேயென்னை மருவுவதேகாரியங்காண் ... ... [௨௫௪]

மூலைக்கோட்டையுள்ளமுத்து மோகனமேயென்னை ... *
திலகக்கோட்டைவேந்தனென்று நீர்தாமறியீரோ... ... ...[௨௫௫]

நானூர்வபுரியா னரியர்சிகாமணிநீ ... ... *
தானுநவரத்ந மாலையென்றுற்றுழ்வாமோ ... ... [௨௫௬]

என்றுபெருஞ்சூற்கொண் டிரங்குமழைக்கெதிரோ... ... *
சென்றுவருண செபஞ்செய்வதுபோல்... ... ... [௨௫௭]

தன்னிடத்தில்வைத்தமயல் தாங்காதாட்கிச்சைசொல்லி ...*
யன்னவளைச்செங்கை தொடலுமயிர்க்குச்செறிந்தாள்... ...[௨௫௮]

பேகனெனும்பெஞ்சைப் பெரியநாகேந்த்ரதுரை... ... *
நாகரிகமோக நவரத்நமாலையுடன் ... ... [௨௫௯]

கொங்கலருமுல்லைக் கொடியுநறுமல்லிகையின் ... ... *
பைங்கொடியுமாகப் படர்ந்தமணிமண்டபத்தில்... ... ... [௨௬௰]

பூத்துச்சொரிந்தமலர்ப் பூம்பாயலின்மீது ... ... *
வாய்த்தரதியுமந்த மன்மதனும்போலிருந்து ... ... [௨௬௧]

சிவுபிளவருந்திச் செங்கைச்சுருள்பகிர்ந்து... ... ...*
கோவையிதழ்முத்தமிட்டுக் கொய்யுமலர்ப்பூமுடித்து... ...[௨௬௨]

கட்டியணைத்துக்கனிவாயிதழ்பருகி ... ... *
வட்டமுலைபிடித்துவண்ணத்துகில்நெகிழ்த்தி ... ... [உ௬௩]

ஆலிங்கனவிதங்களைந்தும்புரிந்தரவம் ... ... *
போலுங்கடிதடமாம்பூவைக்கனிவாக்கி ... ... [உ௬௪]

பொற்கொம்பும்பூங்கொடியும்பூண்டுதுவண்டாடுதல்போல்
கற்குநவசித்ரகரணவகைபாராட்டி ... ... [உ௬௫]

குங்குமகுதம்பயிறுகொங்கையிணகம்பதிய ... ... *
மங்குலினிருண்டகுழன்மஞ்சரிகள்பின்சரிய ... ... [உ௬௬]

வைக்குமுகபத்மமுகவட்டமதியிற்பதிய ... ... *
நெக்குருகிநெக்குருகிநெற்றிகளின்முத்துதிர .. .. [உ௬௭]

பாகனையவாய்மொழிகள்பாதிதடுமாறவொரு .... *
பூகமிசைகாடைகள்புறுவொலிகள்குகுகுவென ... ... [உ௬௮]

வரிவிழிகள்கடைபுரளமதுரவிதழ்வெளிறவிரு ... ... *
பரிபுரமும்வளையுமிடைபதனமிடைபதனமென ... . [உ௬௯]

ஆவியொன்றுகூடிரண்டுளாசையொன்றுநேசமொன்று... *
மேவுசம்ப்ரதாயமொன்றுவேளையிந்த்ரபோகம்வந்து ..... [உ௭௰]

அந்தவனுபோகபரமானந்தசம்போகம் ... ... *
தந்தசுகபோகஞ்சரிப்போகமாய்ப்பெருக ... ... [உ௭௧]

சோபவிடாய்தீர்த்துச்சுனைநீரளைந்துபிர ... ... *
தாபவிடாயாறியிருக்குந்தருணத்தில் ... ... [உ௭௨]

நவ்வியடிபற்றி நடந்ததிளங்கமல்லன்... ... ... *
செவ்வியடிபற்றிச் சேனுதளந்தொடர்ந்து ... ... [உ௭௩]

தென்னனடிபாவத் தேடிவருமேழ்கடல்போல் ... ... *
மன்னனிருக்கு மலர்க்காவில்வந்தணுகி... ... ... [உ௭௪]

கண்ணாரக்காணுமுன்னங் காதாரச்சொற்கேட்டு ... ... *
நண்ணார்புகழ்பெரிய நாகமகூளேந்த்ரதுரை... ... ...[உ௭௫]

மின்னைநிறுத்திவரு மேகம்போன்மோகமின்னாள்... ... *
தன்னைநிறுத்திவந்து தானைக்கெதிரானான்... ... ...[உ௭௬]

கானிவிருந்தையன்வரக் கண்டோர்முகங்களெல்லாம் ... *
பானுவரக்கண்ட பங்கயம்போலாயினவே... ... ...[உ௭௭]

கொண்டல்படிக்குங் கொடைப்பெரியநாகேந்த்ரன்......*
தண்டிகையிலேறியந்தச் சண்பகப்பூங்காவகன்றுன் ... ... [௨௭௮]

மந்திரிதளகர்த்தர்வர மாசேனைமுன்னடக்கத் ... ...*
தந்திரதுரைமக்களுடன் சந்தையூர்க்கேமுகமாய்... ... ...[௨௭௯

வந்தநவபுரியில் வாழுமகோபிலமால்... ... ...*
செந்திருவின்பாதமலர் சேவித்துத்தெண்டனிட்டு ... ... [௨௮௦]

தீர்த்தமுடன்மாலை திருவடிபெற்றுண்மகிழ்ந்து ... ... *
வார்த்தைதவறுதகண்டன் மால்யானைமீதேறி... ... ...[௨௮௧]

தாரைநவுரி தவண்டைதுடிநாகசுரம் ... ...*
பேரிகையெக்காளம் பெரியமேளந்தொனிக்க... ... .[௨௮௨]

கஞ்சுகியர்கைப்பிரம்பர் கட்டியர்முன்கைநீட்டிப்... ... *
பெஞ்சைநகர்வேந்தாப்ர தாபநிகளங்கமல்லா... ... .[௨௮௩]

துங்கசுவாமி துரைராசகண்டஜய ... ... *
ரங்காரணவீம ராயாரவுத்ரமிண்ட... ... ... [௨௮௪]

தீரசுத்தவீரசுப்ர தீபகர்த்தநாவலர்க்கு ... ... *
தாரசத்ருசேதநப்ர தாபவச்ரதேகவுக்ரா... ... ... [௨௮௫]

மகதரங்கர்கவுடர்வங்கர் வடகலிங்கர்குடகர்கொங்கர் ... *
குருத்ர்வந்துபணியுமிந்திர கொலுவிருந்தபுவனசந்திரா ...[௨௮௬]

சாமிபராக்குபராக் கெச்சரிக்கையெனச் ... ...*
சோமோதயம்போற் றுலங்குகுடைநிழற்ற ... ...[௨௮௭]

பக்கக்கவரிரட்டைப் பாவாடைவீசிவர ... ... *
மைக்கட்குமரியர்க ளாலாத்திவந்தேந்த... ... ...[௨௮௮]

மாலைசரிய வருவார்சிலமடவார் ... ... *
சேலைசரிய வருவார்சிலமடவார்... ... ...[௨௮௯]

தண்ணுலவும்பைந்தார் தருவானெனவோடி ... ... *
வண்ணவளைதோற்று வருவார்சிலமடவார்... ... ...[௨௯௦]

தேடுபுகழ்வேந்தனுடன் செல்லுமனதைப்பிடிக்க... ... *
ஓடிதல்போலோடியடி யோய்வார்சிலமடவார்... ... .[௨௯௧]

வல்லியனையாள்பதித்த வாய்வடுவைக்கண்டுதங்கள் ... ...*
மெல்லிதழிற்பதித்து மீள்வார்சிலமடவார் ... ... [௨௯௨]

ஒருமானைப்பந்திவினார் தோடியவாள்வேந்தனீ... ...*
வருமானனேகமெதிர் வந்துநிற்கப்பாராமல் ...(௨௯௫).

வாழிசருவசித்தி வாரணத்திற்றானிறங்கி... ... ...*
ஆழியனையான்பொன் னரண்மனைக்குள்வந்திருந்தான்( )

இங்கேதுரைப்பெரிய நாகேந்த்ரன்வீற்றிருக்க ... ...*
அங்கேமலர்க்காவி லன்னநடைப்பெண்பெருமாள்(௨௯௬

பேராளன்பெருஞ்சைப் பெரியநாகேந்த்ரதுரை ... ...*
வாரானைமகண்டு மதிமறந்துமெய்சோர்ந்தாள்...(௨௯௬)

ஆனைசனைக்காணா தரும்பிடிபோய்ப்பார்ப்பதுபோல் *
மானனையாளந்தமலர் மண்டபமுநீர்ச்சுனையும்...(௨௯௭)

தேடினாள்மூச்செறிந்தாள் செங்கமலத்தாள்சிவப்ப ...*
ஓடினாளெங்கோ னுருவெளியைத்தெண்டனிட்டாள் ...( )

என்னிடத்திற்கோபமே தென்றுமெழுந்திருந்தாள் ...*
கன்னல்வளைத்தங்கொருவன்வந்தெடுப்பக்கண்டயர்ந்தாள்

காடுருவக்காமனெய்த கைப்பாணஞ்செப்புமுலை... ...*
மூடுருவவவே துருவியமான்போதுழன்றாள் ... (௩௱)

காலாயுதக்கொடியோன் கையாயுதவழியே ... ... *
மாலாயுதமீன்ற மாமணியைத்தானுதிர்த்தாள்... (௩௱௧)

பொற்பகலாமாதவியே புன்னையேசண்பகமே ... ...*
கற்பகமேயென்னாசைக் கற்பகத்தைக்காணீரோ (௩௱௨)

காவரசேயாயிரச்செங்கண்ணாசுபோலிருக்கும் ......*
பூவரசேபெஞ்சைப்புவியரசைக்காணீரோ..... ...(௩௱௩)

முன்மாண்பிணைநடக்கமோகமாய்ப்பின்றொடரும்... *
பொன்மானேயென்னாசைப்பூமாலைக்காணீரோ ...(௩௱௪)

தோய்ந்தரவியைத்தொடர்ந்தமுகசூரிய ... ... *
காந்தமேயென்னாசைக்காந்தன்வரககாணீரோ....(௩௱௫)

என்னிடத்தின்மாலாகியிச்சைசொல்லிச்சேர்ந்ததுரை ...*
பின்னெனக்கோரந்தரங்கம்பேசாமற்போவானோ(௩௱௬)

கானிடத்தினானுலவக்கண்டுதனியாகவந்து ... ... *
வானவர்கோனென்னைமனமுருக்கிச்சேர்ந்தானோ(௩௱௭)

தந்திரிகொள்வீணைநனையொளித்துவந்துதெய்வ ... ... *
கந்தருவனென்னைக்கருத்தருக்கிச்சேர்த்தானே ... [௫௱௮]

இந்திரனேயானாற்கண்ணீரைஞ்ஞூறென்பதுண்டே ... ... *
கந்தருவனேயானாற் கண்ணிமைக்கக்காரியமேன்...... [௫௱௯]

பெய்புங்கொண்டையான்பெரியநாகேந்த்ரதுரை .... *
ஐயனணைர்ந்ததல்லாலையமினிவேறுமுண்டோ .... [௫௱௰]

மன்மதனைவென்றுவயங்குந்திருவழகை ... ...*
என்மனதுக்குள்ளேயெழுதவேவந்தகன்றான் ... ...[௫௱௰௧]

கூடியின்பங்கண்டகுதலைமொழிப்பேதைநம்மைத் ... ... *
தேடிமுகம்வாடித்தியங்குவளென்றெண்ணானே ... ...[௫௱௰௨]

இந்தக்கவடுசெய்வானென்றறிந்தாற்கைகலக்கும் ... ...*
முந்தக்குடிலமிட்டுமூன்றாணைகொள்ளேனே ......[௫௱௰௩*

தன்னெஞ்சப்போலத்தழுவிப்பிரிந்திருக்க ... ... *
வன்னெஞ்சியென்றேமறக்கத்துணிந்தானே ... ...[௫௱௰௪]

பேரூர்வழியேநாம் பின்றொடர்வோமென்றாலும் . ...*
ஒருவொன்றுமில்லையே யொன்பதுமொன்றானே... ... [௫௱௰௫]

என்றாங்கும்வேலையிருஞ்சேவலைப்பிரிந்த ... ...*
அன்றிலெனத்தானே சிறியாளறிவயர்ந்தாள் ... ... [௫௱௰௬]

இவ்விடத்தின்மெய்ச்சோர்ந் திவள்கிடக்கவெவ்வேறாய்... ...*
அவ்விடத்திற்பூவெடுத்த வாயிழையாரெல்லோரும்...[௫௱௰௭]

குன்றிரண்டுதாங்குங் கொடிபோலிடைதுவள... ... ...*
நின்றுமலர்பறித்த நேரிழையைக்காணாமல்... ......[௫௱௰௮[

மற்றோர்வனமோநாம் வந்ததெனத்திகைத்தார் ... ... *
சிற்றடியைக்கண்டார் திரண்டாரொருமுகமாய் ... [௫௱௰௯]

சென்றார்நெடுந்தூரந் தேன்மொழியேதேன்மொழியே... *
என்றார்மதிமறந்த வேற்றிழையைவந்துகண்டார்... ...[௫௱௨௰]

கையணையிற்சாய்ந்து கலைகுலையக்கண்முகிழ்ப்பத் ... ... *
தையல்கிடப்பத் தரியாமற்பாங்கியர்கள்... ... ...[௫௱௨௰௧]

தூக்கமோவெம்பசியோ தோழிபணாக்காணாத... ... ...*
ஏக்கமோமன்மதன்கண் ணேறுபட்டகாரணமோ ...[௫௱௨௰௨]

தெய்வக்குறையோநாஞ் செய்வதென்றென்றேதிகைத்து
க், கையாற்றலைதிருத்திக் கட்டியெடுத்தணைத்தார் (௫௨௫)

மாத்தளிசால்வீசி மதிமுகத்தில்வெயர்துடைக்க... ...*
எத்திழையாண்மூர்ச்சைதெளிந்தேங்கினாள்போலிருந்தாள்

ஒண்டொடியார்மங்கை யுடலிற்குறியிடங்கள்... ......*
கண்டிதுவேவதென்றார்கள் கள்ளிக்கும்வாயுமுண்டோ ()

கைநடுங்கிக்கானடுங்கிக் கன்னியர்களெல்லாரும்... ...*
மெய்நடுங்கித்தானே விசாரமிட்டுக்கொண்டுநின்றார்...()

வல்லையகொங்கை மடமானைக்கைலாகின் ... ...*
மெல்லமெல்லத்தாநடத்தி வீட்டிற்கொடுபோனார் (௫௨௭)

பாகார்மொழியாளைப் பஞ்சணையிற்சேர்த்திடவும் ... *
மோகவனன்மீற மூத்தம்பொரிந்ததுவே... ... (௫௨௮)

மூன்கையணிவளைகண் மூச்செறியக்காய்ந்துருகி... ...*
மென்குவளைக்கண்ணீரின் வெள்ளத்தாலாறியதே (௫௨௯)

வீசியவேள்ம்பு மெழுகுபார்வைக்குளுருக் ... ... *
கூசிகள்போற்பாயவுருக் கூசியுள்ளயர்ந்தாள் ... (௫௩௰)

கண்டுசகியார் கருத்திச்சகியாராய் ... ...*
ஒண்டொடிக்குச்சீத வுபசாரஞ்செய்யலுற்றார் ...(௫௩௧)

செய்தவுபசாரமெல்லாந் தேனுள்பொருள்ளாகி ... ... *
வைதுமடவானா மனங்கொதித்துச்சொல்லலுற்றாள் ()

வேடையெலாந்தீர்வெண்மேல் வீசுவார்போலவெயிற் *
கோடையெலாமென்மீதிற் கொண்டுவந்துவிட்டீரோ ()

சாளரத்தைநீக்கித் தனிப்புலியைப்பாயவிட்டு... ......*
நீளுமலைத்தென்றலென்றீர் திட்டேரஞ்செய்திட்டீரோ.. ()

காமசரமெல்லாங் கனகமஞ்சமேற்பரப்பிப்... ... ...*
பூமலரென்றீர்மடவீர் பொய்யும்படித்தீரோ... ...(௫௩௫)

சேலென்றகேதனத்தோன் றேமாலையைப்பிழிந்து ... *
பாலென்றுதந்தீர் பழிகாரரானீரோ ... ... (௫௩௬)

மங்கைநல்லீரின்றென் வனமுலைக்குநீரணிந்த ... ...*
குங்குமமுஞ்சாந்துங் குளிர்ந்தபனிநீரும் ... ...(௫௩௭)

தேடும்பாதிதையர்பாற் காதலனைச்செல்லவிட்டு... ...*
வாடுமனையாண் மனம்போற்கொதிக்குதென்றாள் (௫௩௮)

என்னடிலம்பி யிவள்படும்பாடத்தனையும் ... ... *
அன்னைக்குச்சொன்னா ரவள்பதறியோடிவந்தாள் (௫௩௯)

பெற்றெடுத்ததன்மகளைப் பேய்க்கிழவியாளுலும்......*
குற்றமறநோக்கிக்குறிப்புறவேகண்டுகொண்டாள் ...()

செவ்வாயிதழ்க்குறியுஞ் செப்புமுலைமேற்பதித்த......*
கைவ்வாளுகிர்க்குறியுங் கண்மையழிந்ததுவும் .. (௫௪௧)

பார்த்தாளுடன்போன பாங்கிபரைச்சண்டையிட்டாள் *
வேர்த்தாண்மகளை வெகுண்டாள்விசாரமிட்டாள்(௫௪௨)

நீங்களறியாமலிந்தநேரிழையைப்பூங்காவில் ... .*
ஆங்கொருவன்கூடி யணைந்தவகைசொல்லுமென்றாள் *

போனதுவும்வெவ்வேறாய்ப் பூவெடுக்குமங்கைதனி... *
ஆனதுவுங்கண்டதுவு மாயிழைபார்தாமுரைத்தார் ... ()

சந்தமுலையாருரைக்கத் தையல்குணமாலைசொல்வாள்...*
அந்தவனத்தி லசுகையுற்றவேளையிலே... ... ...(௫௪௫)

சுற்றிப்படிபார்ந்தேன் றனாகளடிபோலதிலே .... *
உற்கசங்கரோகை புடன்பதுமரோகைகண்டேன் (௫௪௬)

அச்சுவடுகண்ட வகுகையுமல்லாற்புவனம் ... ... *
மெச்சுநிலைக்கோட்டை வேள்பெரியநாகேந்த்ரன்.(௫௪௭)

வேட்டைக்குவந்தானு மேளத்தொனியுமந்தக் ... ...*
காட்டில்வெடித்தொனியுங் காதாரக்கேட்டதென்றாள் ()

அப்படியோசொல்லென் னயிர்தருகுணமாலைபின்னே ..*
செப்படிவித்தைத்தொழில்விற்சித்திரத்தைக்கண்டானோ()

வண்டார்குழலாய் மதன்பெரியநாகேந்த்ரன் ... ... *
கண்டானுனீன்ற கருங்கலைவிட்டுப்போவானோ (௫௫௰)

அந்தத்துரையழகைக் கண்டாலுநானீன்ற ... ...*
பைந்தொடியுத்தாமெனுருகை பாராமன்மீள்வாளோ ...()

எம்மையறியாமலிவ ளெப்படிதான்கைகலந்தாள்......*
நம்மையறியாமலந்த நாயகனெவ்வாறணைந்தான்(௫௫௨)

கன்னமொருவரிட்டாற் காவலனோடேயுரைப்பேம் ... *
மன்னவனேயித்த வனுமைசெய்தாலார்க்குரைப்பேம் ... ...[௫௫௩]

பாகார்மொழியாளைப் பன்றிமலைச்சாரலுக்குப்... ... ...*
போகாதேயென்றுசொன்னேன் புத்தியாக்கேட்டாயோ ... [௫௫௪]

பேய்வார்த்தையானாலும் பெற்றபிள்ளைகேட்பதுண்டு ... *
தாய்வார்த்தைகேளாத் தங்கச்சிமூப்பாச்சே... ... ... [௫௫௫]

தெண்டிக்குமன்னவனைச் சேர்ந்தவனுக்காரிகையைநான் ... *
கண்டிக்கப்போகாதே கள்ளியென்னக்கூடாதே .. .. [௫௫௬]

மானபரன்பெஞ்சை மகராசனைமருவப் .... *
போனவளேயன்றியிவள் பூவெடுக்கப்போனவளோ ....[௫௫௭]

விந்தைதருமொன்பதூர் வேந்தனுக்குமோகினிமா... ...*
மந்திரமுண்டென்றென் மதலையறியாளோ... .... [௫௫௮]

தூயபுகழ்பெஞ்சைத் துரைக்குநமைப்போன்மடவார் ...*
ஆயிரம்பேருண்டென் றரங்கியறியாளோ... ... ...[௫௫௯]

பூங்கொடிசூழ்தண்டலையிற் பூவெடுக்கப்போனவுயிர்ப் ...*
பாங்கிமார்தாமிருக்கப் பாவைதனைச்சேர்வானேன் ... ... [௫௬௰]

அந்நாளில்வேத னமைத்தபடியேயொழிய .. ..*
மின்னாரைநோவதுவும் வீணேபிதற்றுவதும்... ... ...[௫௬௧]

நம்மையறியாம நடந்ததெல்லாம்யாவருக்கும் ... ...*
சம்மதிக்குங்காரியமே தையனடத்திவந்தாள்... ... ...[௫௬௨]

மன்னனழகுக்கென் மகளேமனையாளாம்... ... ...*
கன்னியழகுக்குமந்தக் காவலனேகாதலனாம்... ... ...[௫௬௩]

மாவடுக்கண்மங்கையென்ன மாதவமுன்செய்தாளோ ... *
பூவெடுக்கப்போனாள் புதையலெடுத்துவந்தாள் ... ...[௫௬௪]

லையப்பழநழுவிப் பாலில்விழுந்ததுநான் ... ...*
செய்ததவம்மாமகண்முன்செய்தபூசாபலமோ ... ... [௫௬௫]

என்றுமகளை யிருகையாற்றான்றழுவி... ... ...*
ஒன்றுக்குமஞ்சாதே யோகமுமுன்பங்காச்சே ... ... [௫௬௬]

சிந்தமகூளேந்த்ரனருள் செய்பெரியநாயகனைச் ... ... *
சொந்தமாய்க்கூடிச் சுகித்துமிகவாழ்ந்திரென்றாள் ... ... [௫௬௭]

காவுலவுமின்னே கனகபல்லக்கேறியிந்தப்... ... ...*
பூவுலகு கொண்டாடப் புத்திரனைப்பெற்றிடுவென்றாள்... ... [௫௬௮]

என்னுமந்தவேளைசில வேந்திழையார்சூழ்ந்துவர... ... *
வன்னமணிப்பொற்சிவிகை வாயில்வரக்கண்டாளே ... ...[௫௬௯]

கண்டாண்டகளைக் கனகபல்லக்கேற்றிபின்பு... ... ...*
கொண்டாள்குணமாலை கூடச்செலவிடுத்தாள்... ... ...[௫௭௦]

சொற்படியேயந்தத் துரைப்பெரியநாயகனும் ... ...*
கற்பகத்தைக்கூடியவள் காதல்கொண்டகாதலியாய் ... ... [௫௭௧]

பூதலத்தோர்வாழ்த்தநல்ல புத்திரனைப்பெற்றெடுத்து ... *
மாதுநவரத்ந மாலைமகிழ்வுற்றிருந்தாள்... ... ...[௫௭௨]

சீர்வாழிலோகஞ்செழித்துமிகவாழியென்ப ... ... *
தார்வாழிவெள்ளையுபயக்கொடிவாழி .... [௫௭௩]

பெஞ்சைநகர்வாழிபெரியநாகேந்த்ரதுரை ... ...*
கஞ்சமலர்மாதுகருணைபெற்றுவாழியவே ....[௫௭௪]

கூளப்பநாயக்கன்காதல்